**பதவிஸ்ரீபுர பிரதேச சபை**

**திருகோணமலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 21 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மே 08 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 பெப்ரவரி 23 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பதவிஸ்ரீபுர பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

2014 சனவரி 27 ஆந் திகதிய பீஎல்/05/பீஏ/இபொதுகநி ஆம் இலக்க மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் பின்பற்றப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியில் உள்ளடக்கப்பட்ட 06 இடங்களுக்குரிய கட்டிடங்களின் பெறுமதி ரூபா 49,846,200 ஆக இருந்ததுடன் அந்தக் காணியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 பெறவேண்டிய கணக்குகள்

02 வருடங்கள் முதல் 18 வருடங்கள் வரையிலான காலப்பகுதிக்குரிய ரூபா 226,309 கூட்டுத்தொகையான பெறவேண்டிய கடை வாடகையை அறவிடுவதற்கோ அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் இன்மையினால் அந்த விடயங்களை கணக்காய்வின்போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்தவோ அல்லது பரீட்சிப்பதற்கோ முடியாதிருந்தது.

| கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| காணியும் கட்டிடமும் | 49,846,200 | விரிவான பட்டோலை, நிலையான சொத்துப்பதிவேடு, உரித்துறுதி |
| நானாவித வைப்புக்கள் | 600,863 | பெறுவனவுப் பற்றுச்சீட்டு, காலப்பகுப்பாய்வு, விரிவான பட்டோலை. |

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

உள்ளூராட்சி, மாகாண சபைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு இணங்க 06 மாதங்களுக்கு ஒருதடவை வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் சபைக்குச் சொந்தமான 09 வாகனங்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 நிதி விளைவுகள்

--------------------------------

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,358,125 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 383,973 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது சேவைகளுக்கான கட்டணம் அறவிடல் ரூபா 3,433,417 இனால் அதிகரித்தமை மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 2,974,152 இனால் அதிகரிப்பதற்கு பிரதானமான காரணமாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

--------------------------------

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

------------------------------------------------------------------

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| வாடகை | 568 | 450 | 212 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 282 | 214 | 123 |
| ஏனைய வருமானம் | 2,606 | 2,327 | 491 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------

### 3.1 செயற்பாட்டு நலிவுகள்

------------------------------------

கிழக்கு மாகாண நீர் வழங்கல் அபிவிருத்தி செயற்திட்டத்திலிருந்து கிடைத்த UPVC குழாய்கள் மற்றும் அதன் இணைப்புக்களில் முறையற்ற கட்டுப்பாடு (UPVC Pipes & Fittings)

மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தின் மூலம் சமூக பங்களிப்புடன் குழாய் பதித்தலுக்காக பிரதேச சபைக்கு 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் UPVC குழாய் பொருத்தும் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்ாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. சபைக்குக் கிடைத்தமையும் சபையிலிருந்து விநியோகிக்கப்பட்டமையும் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய இருப்புப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

ii. உரிய குழாய் பதிக்கும் பணிகள் சமூகப்பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் சமூக சங்கங்கள் நிதி பற்றாக்குறையின் அடிப்படையில் முன்வராமையின் காரணமாக சபையினால் அந்த வேலை நிறைவேற்றப்பட்டிருந்தது. இருந்த போதிலும் பதிக்கப்பட்ட குழாய்கள் தொடர்பான விபரம் சபையினால் பேணப்பட்டிருக்கவில்லை.

iii. எஞ்சியிருந்த கணிசமான அளவு குழாய் இருப்பொன்று பதவிஸ்ரீபுர, ஜயந்திபுர மற்றும் சமன்புர போன்ற களஞ்சியங்களில் முறையற்ற வகையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமையின் காரணமாக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குழாய் இருப்பின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு முடியாதிருந்தது.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

**பொருள் மெய்மையாய்வின் அறிக்கைகளின் சிபாரிசுகளை அமுல்படுத்துதல்**

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. 2014 யூன் 30 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளின்படி பழுதுபார்ப்பதற்கு சிபாரிசு செய்யப்பட்ட 10 பொருள் வகைகளை பழுதுபார்ப்பதற்கும், அகற்றுவதற்கு சிபாரிசு செய்யப்பட்ட 15 பொருள் வகைகளை அகற்றுதவற்கும் 2014 நவம்பர் 25 வரை தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி மெய்மையாய்விற்காகச் சமர்ப்பிக்கப்படாத 48 புத்தகங்கள், காணாமல் போன 25 பொருள் வகைகள் மற்றும் பொருட்பதிவேட்டிற்கு எடுக்கப்படாத 108 விடயங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருந்த போதிலும் அது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் கணக்காய்வுத் திகதியான 2014 நவம்பர் 25 ஆந் திகதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

**(அ) பழைய மதவாச்சி தாய்சேய் சிகிச்சை நிலையத்தை நிர்மாணித்தல்**

பிரதேச சபை பழைய மதவாச்சி கிராம சேவைப் பிரிவில் தாய்சேய் சிகிச்சை நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தக்காரருடன் ரூபா 4,074,017 (வற் தவிர்த்து) ஒப்பந்தப் பெறுமதியில் 2013 செப்தெம்பர் 24 ஆந் திகதி உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. ஒப்பந்த உடன்படிக்கையின் படி நிர்மாண நடவடிக்கைகள் 2013 திசெம்பர் 23 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் உரிய நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு கட்டிடம் 2014 யூலை 01 ஆந் திகதி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் கட்டிடத்திற்கு வெளியே மதிலைப் பூர்த்தி செய்தல், பெயர்ப்பலகை பொருத்துதல். மின்சார வழங்கலைப்

பெற்றுக்கொள்ளல், வெளியேயுள்ள நிலத்தை மண் இட்டு மட்டப்படுத்தும் நடவடிக்கைகள் என்பன கணக்காய்வு வெளிக்களப் பரிசோதனைத் திகதியான 2014 நவம்பர் 25 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

ii. சிகிச்சை நிலைய நிர்மாணத்தின் நோக்கமான பழைய மதவாச்சி கிராம சேவைப் பிரிவில் 250 குடும்பங்களின் பெண்கள் மற்றும் பிள்ளைகளின் சுகாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வைக் பெற்றுக்கொடுத்தல் ஒருவருட காலமாக தமாதமாகியிருந்தது.

(ஆ) சைமன் கடை முதல் மீஓயா அமுன வரையான வீதிக்கு கொங்கிரீட் இடும் செயற்திட்டம்

---

பிரதேச சபை மேற்கூறப்பட்ட வீதிக்கு கொங்கிரீட் இடுவதற்காக 2012 யூன் 20 ஆந் திகதி ஒப்பந்தக் கம்பனியுடன் ரூபா 9,195,359 ஒப்பந்தப் பெறுமதியில் (வற் தவிர்த்து) உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருந்த போதிலும் நலிவான செயலாற்றலின் காரணமாக 2012 திசெம்பர் 20 ஆந் திகதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 2014 ஏப்ரல் 29 ஆந் திகதி ரூபா 9,754,042 ஒப்பந்தப் பெறுமதியில் புதிய ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. ஒப்பந்த உடன்படிக்கையின் படி 2014 ஆகஸ்ட் 28 ஆந் திகதியளவில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், ஒப்பந்த அளவிடைப் பத்திரத்தின் படி இந்த வீதியின் இருப்பக்கங்களிலும் வீதியோரங்களை அமைத்தல், மதகு வேலைகளைப் பூர்த்தி செய்தல், கொங்கிரீட் பகுதிகள் பிரிக்கப்பட்டு ரெஜிபோம் அகற்றி தார் இடல் போன்ற வேலைகள் கணக்காய்வுத் திகதியான 2014 நவம்பர் 12 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

ii. புதிய ஒப்பந்தக்காரருடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைக்கு இணங்க நிர்மாணக் காலம் 2014 யூலை மாதம் 01 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் அத்திகதிக்குப் பின்னர் செலுத்தப்பட்ட தொகையிலிருந்து அறவிடவேண்டிய தாமதக் கட்டணம் ரூபா 658,398 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2005 இன் 03 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் III ஆம் பகுதியின் படி (2007 இன் 13 ஆம் இலக்க மற்றும் 2009 இன் 18 ஆம் இலக்க நிதி திருத்த அதிகாரச்சட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் கீழ்) பிரதேச சபையின் பிரதான அலுவலகக் கட்டிட நிர்மாணத்திற்காக ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்ட ரூபா 36,068,873 தொகைக்குரிய நிர்மாண உறுதிப்படுத்தல் நிதிய வரி (CIGFL) ஆன ரூபா 90,172 தொகை நிறுத்தி வைக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

-----------------------------------------

மீளாய்வாண்டின் உள்ளபடியான செலவினத்திற்கும் பாதீட்டு நிதியேற்பாட்டிற்கும் இடையே 15 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் காணப்பட்டது. அதன் படி வருடாந்த பாதீடு முறையான நிதிக் கட்டப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.5 மனிதவள முகாமைத்துவம்**

-----------------------------------------------

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

--------------------------------------------------------------------------------------------------------------------

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 01 | - | 01 |
| இரண்டாம் நிலை | 10 | 06 | 04 |
| மூன்றாம் நிலை | 26 | 12 | 14 |
| மொத்தம் | 37 | 18 | 19 |

ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தர், முகாமைத்துவ உதவியாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், நூலகர் மற்றும் மின் தொழில்நுட்பவியலாளர் பதவிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு கணக்காய்வுத் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு

(ஈ) ஒப்பந்த நிர்வாகம்

(உ) மனித வள முகாமைத்துவம்